www.tamilarangam.net

முகப்பு எம்மைப்பற்றி உங்கள் கருத்து தொடர்புகளுக்கு
இந்தியாவிலிருந்து சிறீலங்காவுக்கு கேபிள் மூலம் மின்சாரம் 2ம் கட்ட ஆய்வு ...

பக்கங்கள்

தமிழீழம்
தமிழ்நாடு
உலகத்தமிழர்
சிறீலங்கா
சமகாலப்பார்வை
பதிவுகள்
சிறப்பு கட்டுரைகள்
நிகழ்வுகள்
விழுதுகள்

ஒளி / ஒலி

காணொலிகள்
படங்கள்
ஒலிப்பதிவுகள்

தேடல்

தேடுக

Home ▸ பதிவுகள் ▸ ஈழமும் இந்தியாவும்-03 : கொழும்பில் தாக்கப்பட்ட 'றோ" அதிகாரி

## ஈழமும் இந்தியாவும்-03 : கொழும்பில் தாக்கப்பட்ட 'றோ" அதிகாரி

ஞாயிற்றுக்கிழமை, 24 அக்டோபர் 2010 00:00

SHARE



1983 ஜூலை.. இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு மாதம். ஒவ்வொரு தமிழர்களின் வாழ்க்கையிலும் ஏதோ ஒரு தாக்கத்தையோ அல்லது ஞாபகப் பதிவையோ ஏற்படுத்திய மாதம். ஈழத் தமிழர்களுடைய அரசியல் வாழ்க்கையிலும் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய மாதம். யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் பலாலிவீதியால் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனம் ஒன்று ஜூலை 21 ஆம் திகதி நள்ளிரவு தபாற்பெட்டிச் சந்தியில் வைத்துத் தாக்குதலுக்குள்ளாகின்றது.

விடுதலைப் புலிகள் அந்தக் காலப்பகுதியில் நடத்திய தாக்குதலில் மிகப்பெரிய தாக்குதல் இது. புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரன் தலைமையில் அப்பகுதியில் மறைந்திருந்த போராளிகளால் நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்ட இத்தாக்குதலில் இராணுவ வாகனத்தில் பயணம் செய்த 13 படையினர் அந்த இடத்திலேயே கொல்லப்படுகின்றார்கள்.

இச்சம்பவத்தில்தான் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி செல்லக்கிளி அம்மான் வீரமரணமடைகின்றார். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன், தளபதி கிட்டு, அருணா, பண்டிதர், சீலன்... என புலிகளின் மூத்த தளபதிகள் பலர் களத்தில் ஒன்றாக இணைந்திருந்து நடத்திய ஒரு தாக்குதல் இது. இந்தளவு அதிகளவு படையினர் ஒரே சமயத்தில் கொல்லப்படுவது இதுதான் முதல்முறை என்பதால் அதிர்ச்சி அலை இலங்கை முழுவதையும் ஸ்தம்பிக்க வைக்கின்றது. தென்பகுதியில் குறிப்பாக சிங்களப் பகுதிகள் அதிர்ச்சியால் உறைந்துபோன நிலை.

இந்த நிலையில்தான் தென்பகுதியில் தமிழர்களுக்கு எதிரான தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. சிலர் நினைக்கலாம்...திருநெல்வேலித் தாக்குதலால் ஆத்திரமடைந்துதான் சிங்களவர்கள் இந்தக் கலவரத்தில் இறங்கினர்கள் என்று. ஆனால் உண்மை நிலை அது அல்ல. தமிழர்கள் மீது தாக்குதல்களை நடத்துவதற்கு ஆட்களைச் சேர்ப்பதற்கு இந்தச் சம்பவம் உதவியிருந்தாலும் கூட, இந்தக் கலவரம் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்த ஒன்றாகும். பெருமளவு வாள்கள் மற்றும் ஆயுதங்கள் இதற்காக ஏற்கனவே தயாரிக்கப்பட்டு தயாராக வைக்கப்பட்டிருந்தன. திருநெல்வேலித் தாக்குதலை காடையர்கள் தமக்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டனர்.

ஜெயவர்த்தன அரசாங்கத்தில் அமைச்சர்களாகவும், திணைக்களத் தலைவர்களாகவும் இருந்த பலர் இந்தக் கலவரத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தனர். குறிப்பாக அப்போது விஞ்ஞானக் கைத்தொழில் அமைச்சராக இருந்த சிறில் மத்யூ பெருமளவு உறுப்பினர்களைக் கொண்ட சிங்களக் காடையர் குழு ஒன்றை வழிநடத்துபவராக இருந்தார். கொழும்பு, கம்பஹா பகுதிகளில் நடைபெற்ற தாக்குதல்களுக்கு அவரே தலைமை தாங்கினார் என்பதுடன், அதற்கான திட்டங்களை வகுத்துக்கொடுத்தவராகவும் அவரே இருந்தார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன கலவரத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை. அனைத்தையும் அவர் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் இது சிங்களவர்களின் உணர்ச்சி... அதனைக் கட்டுப்படுத்துவதற்கு தான் விரும்பவில்லை என அவர் தெரிவித்திருந்தார்.

இதன் மூலம் கலவரத்துக்கு அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ ஆதரவு அல்லது அநுசரணை கிடைத்தது. கலவரத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கக்கூடாது என்று காவல்துறைக்கும், முப்படைகளுக்கு அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டிருந்தமையால் அவர்கள் வெறுமனே பார்வையாளர்களாகவே இருந்தார்கள். சில சந்தர்ப்பங்களில் சிங்களக் காடையர்களுக்கு அவர்கள் உதவினார்கள்.
கொழும்பு நகர் எரிந்கொண்டிருந்தது. தமிழர்களுடைய கடைகள், வீடுகள் உடைத்துச் சூறையாடப்பட்ட பின்னர் அவை தீவைத்துக்கொழுத்தப்பட்டன. வீதிகளில் சென்ற வாகனங்கள் சோதனையிடப்பட்டு தமிழர்கள் வாகனங்களுடன் வைத்துத் தீ மூட்டிக்கொழுத்தப்பட்டனர். வீதிகளில் எரிந்துபோன வாகனங்களும், எரிந்கொண்டிருக்கும் வாகனங்களும் வீதிகளைப் புகைமண்டலமாக்கிக்கொண்டிருந்தன. நாதி அற்ற நிலையில் தமிழர்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடந்துகொண்டிருந்த இந்த இன சங்காரம் உலகத்தின் மனச்சாட்சியைத் தொடுவதாக இருக்கவில்லை. தமிழர்கள் இவ்வாறு கொல்லப்படுவதையிட்டு யாருமே அலட்டிக்கொள்ளவில்லை. மொழியால் இணைந்திருந்த தமிழகத்தில் மட்டும் இது பெருமளவு உணர்வலைகளை ஏற்படுத்தியது.
தென்னிலங்கை பற்றி எரிந்துகொண்டிருந்த இந்த நிலையில் கொழும்பில் ஒரு காட்சி. கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் இராஜதந்திரியாகப் பணியாற்றிகொண்டிருந்த மத்யூ ஏப்ரஹாம் தனது காரில் காலி வீதியூடாகச் சென்று கொண்டிருக்கின்றார். கொழும்பு நிலை எவ்வாறு உள்ளது என்பதைப் பார்ப்பதும், அது தொடர்பாக விரிவான அறிக்கை ஒன்றை புதுடில்லிக்கு அனுப்பிவைப்பதும்தான் அவரது நோக்கமாக இருந்தது. தான் இந்திய இராஜதந்திரியாக இருப்பதால் தனக்கு ஆபத்து இல்லை என அவர் எதிர்பார்த்திருந்தார்.

தமிழர்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள் மற்றும் வாகனங்கள் என்பவற்றை தீவைத்துக்கொழுத்திக்கொண்டிருந்த சிங்களக் காடையர் கூட்டம் திடீரென ஏப்ரஹாமின் காரை நிறுத்தியது. தனக்கு ஆபத்து என அவர் உணர்ந்து கொள்வதற்கு முன்னதாகவே காரின் கண்ணாடி ஜன்னல்கள் பொல்லுகளால் அடித்து நொருக்கப்பட்டன. காரிலிருந்து வெளியே இழுத்து எடுக்கப்பட்ட இந்திய இராஜதந்திரி மீது சரமாரியான தாக்குதல் தொடுக்கப்பட்டது. தான் ஒரு தமிழர் அல்ல எனவும், தான் ஒரு இந்திய இராஜதந்திரி எனவும் அவர் எவ்வளவோ சொல்லியும் சிங்களக் காடையர்கள் தாக்குதலை நிறுத்தவில்லை. பதிலாக அவர்கள் தாக்குதலைத் தீவிரப்படுத்தினார்கள். அவரது காரின் மீது பெற்றோல் ஊற்றப்பட்டு தீவைத்துக்கொழுத்தப்பட்டது. கார் எரிந்துகொண்டிருக்கும் நிலையில் அவர் கடுமையாகத் தாக்கப்பட்டார். ஆனால், அதிஷ்டவசமாக கடுமையான காயங்களுடன் அவர் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு பின்னர் கடும் பாதுகாப்புடன் சிகிச்சை பெற்றுத் தேறினார். புதுடில்லிக்குச் செய்தி அனுப்புவதற்காக நிலைமைகளைப் பார்வையிட களத்தில் இறங்கிய அவரே பின்னர்

பதிவுகள்

பதிவுகள்

ஈழமும் இந்தியாவும்-15: பயிற்சி முடிந்து யாழ். திரும்பிய போராளிகள்



ஈழப் போராளி அமைப்புக்களு இந்திய ஆயுதப் பயிற்சிகள் இரண்டு பிரிவுகளாக இடம்பெற்றது என்பதை கடந்த வாரத்தில் பார்த்தோம். ஒரு பறம் விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகளக்கு உத்தர பிரதேசத்தில் இந்திய இராணுவ அதிகாரிகள் பயிற்சிகளை வழங்க, மற்றொரு புறத்தில் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றம் ஈரோஸ் அமைப்பின் போராளிகளுக்கு இந்திய இராணுவ அதிகாரிகள் ஆயுதப் பயிற்சிகளை வழங்கிக்கொண்டிருந்தார்கள்.

ஈழமும் இந்தியாவும்-14: றோ அதிகாரியை சந்திக்க அவசரமாக தமிழகம் வந்த பிரபாகரன்



இந்திய இராணுவப் பயிற்சித் திட்டத்தைப் பயன்படுத்திக் ஈழப் போராளி அமைப்புக்கள் அனைத்தினதும் தலைமையைத் தான் எடுத்துக்கொள்வதற்காக சந்திரஹாசன் வகுத்துவைத்திருந்த திட்டம் அன்டன் பாலசிங்கத்துக்கு பெரும் சீற்றத்தைக் கொடுத்தது. இது சந்திரஹாசனின் திட்டமாக மட்டுமன்றி றோவின் ஒரு பகுதியினரும் இதனை விரும்பியிருப்பதற்கான ஏதுநிலைகளும் காணப்பட்டன.

More:
ஈழமும் இந்தியாவும்-13: இந்திய ஆயுத பயிற்சியின் பின்னணியில் ஒரு திட்டம்..
ஈழமும் இந்தியாவும்-12: இந்திய ஆயுதப் பயிற்சித் திட்டமும் புலிகளும்

சிந்தனைத் துளிகள்

"நாம் அரசியல்வாதிகளல்லர் நாம் புரட்சிவாதிகள்."

-தேசியத் தலைவர்

பூராயம் - RSS

தமிழீழத் தளங்கள்

தமிழீழக் குழுமம்

தமிழ்வெளி

சமகாலப்பார்வை

சமகாலப்பார்வை

லசந்தவின் மரணத்தின் பாதை : அரசு கிளப்பும் புதிய சர்ச்சை





இலங்கையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய சன்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலையில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்குத் தொடர்பு இருக்கின்றதா? அல்லது இலங்கை அரசாங்கம் இந்தப் படுகொலையில் அவரை மாட்டிவிடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதா?

மும்பையில் மகிந்தருக்கு கிடைத்த இரட்டைத் தோல்வி: புலனாய்வுத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழமும் இந்தியாவும்-11: ஜெயவர்த்தனவுக்கு எதிராக இந்திராவை தூண்டிய காரணிகள்

புதுடில்லிக்கு செய்தியானார்.

1983 ஜூலைக் கலவரத்தைப் பொறுத்தவரையில் இது இந்தியாவுக்கு ஒரு சிறிய செய்திதான். ஆனால் இதன் பின்னணியில் அப்போதைய சிங்களவர்களின் மனநிலையைத்தான் புரிந்துகொள்ள வேண்டும். இந்தியர்கள் என்றால் அவர்கள் அனைவருமே தமிழர்கள்தான் என்ற ஒரு எண்ணம் சாதாரண சிங்கள மக்களிடம் அப்போது காணப்பட்டது. அது தமிழத் திரைப்படங்கள் ஏற்படுத்திய தாக்கமாக இருக்கலாம். அத்துடன் இந்தியா எப்போதும் தமிழர்களுக்கு ஆதரவான நாடு அதனால் சிங்களவர்களுக்கு ஆபத்து என்ற ஒரு கருத்தும் சிங்களவர்களின் அடி மனதில் பதிந்துபோயிருந்தது.

1971 கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பி., இந்திய விஸ்தரிப்பு என்பதை தமது பிரச்சாரங்களில் பிரதானமான ஒன்றாக எடுத்திருந்தது. இது ஒருவகையில் இனவாதத்தையும் கலந்த ஒரு பிரச்சாரமாகவே இருந்தது. ஜே.வி.பி.யின் பிரச்சாரங்கள் சிங்களவர்களை முழுமையாகக் கவரவில்லை என்ற போதிலும் இந்த இந்திய விஸ்தரிப்புவாதம் என்ற கருத்து சிங்கள மக்களின் மனதில் பதிந்திருந்தது. இந்தியா பற்றிய ஒரு அச்சம் அவர்களிடம் பதிந்திருந்தது.

இந்தப் பின்னணியில் தமிழ்ப் போராளிகளின் ஆயுதப் பயிற்சி முகாம்கள் தென்னிந்தியாவில் செயற்படுவதாக 1982 நடுப்பகுதியில் வெளியான செய்திகளும், பிரபாகரன் மற்றும் உமா மகேஸ்வரன் ஆகியோரை நாடு கடத்துவதற்கு இந்தியா மறுத்திருந்தமையும் இந்தியாவையும் தமது எதிரியாகக் கருதும் ஒரு மனப்பான்மையை சிங்களவர்களிடம் ஏற்படுத்தியிருந்தது. இந்தியத் தூதரக அதிகாரி என ஏப்ரஹாம் தன்னை வெளிபடுத்திய பின்னரும் அவர் தாக்கப்பட்டமைக்கு இவைதான் காரணம்.

ஆனால் இந்த இடத்தில்தான் மற்றொரு முக்கியமான உண்மையைப் பார்க்க வேண்டும். மத்யூ ஏப்ரஹாம் தன்னை ஒரு இந்தியத் தூதரக இராஜதந்திரி என அறிமுகப்படுத்திக்கொண்ட போதிலும், அவரது இந்த இராஜதந்திர நியமனத்தின் பின்னணியில் ஒரு மர்மம் உள்ளது. உண்மையில் அவர் ஒரு உளவாளி. வெளிநாட்டுப் புலனாய்வுத் தகவல்களைத் திரட்டுவதற்காக இந்தியாவால் அமைக்கப்பட்ட றோ (**Research And Analysis Wing- RAW**) என்ற பலனாய்வு அமைப்பின் ஒரு சிரேஷ்ட உறுப்பினராகவே அவர் கொழும்புக்கு அனுப்பப்பட்டிருந்தார். கொழும்பில் இந்தியத் தூதரகத்தில் இராஜதந்திரப் பணி என்பது அவரது பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருந்த ஒரு 'கவர்" என்று சொல்லலாம்.

இவ்வாறு கொழும்பில் புலனாய்வு நடவடிக்கைகளை 1982 ஆம் ஆண்டிலேயே ஆரம்பித்திருந்த இந்தியா, இலங்கையைக் கையாள்வதற்கான சில திட்டங்களையும் வகுத்திருந்தது. அந்த நிலையில்தான் ஜூலைக் கலவரம் வெடித்தது. தமிழகத்தின் இது ஏற்படுத்திய உணர்வலைகளையடுத்து கொழும்புக்கு விஷேட தூதுவர் ஒருவரை அனுப்ப இந்தியா தீர்மானித்தது. இதன் மூலமாக அரசியல் காய்நகர்த்தல் ஒன்றையும் இந்திரா காந்தி மேற்கொண்டார்.

கொழும்பு எரிந்துகொண்டிருந்த நிலையிலேயே இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியால் அனுப்பப்பட்ட அந்தத் தூதுவர் கொழும்புக்கு விமானம் ஏறினார்...

அது பற்றிய தகவல்களுடன் அடுத்த வாரம்.

பூராயத்துக்காக
**சிவயோகன்**

Add Comment

இறுதியாக இற்றைப்படுத்தப்பட்டது (செவ்வாய்க்கிழமை, 28 டிசம்பர் 2010 17:35)

**தகவல்கள்**



உலகக் கிண்ணத்துக்கா கிரிக்கெட் போட்டியில் இலங்கை படுதோல்வியடைந்தது என்பதைவிட, இந்தப் போட்டியின் போது இந்தியாவினால் இலங்கை- குறிப்பாக மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்ட முறையில் அவமானப்படுத்தப்பட்டதுதான் கொழும்புக்குப் பெரும் சீற்றத்தைக் கொடுத்திருக்கின்றது. இந்தியாவால் அவமானப்படுத்தப்பட்டதை சொல்லவும் முடியாமல் சொல்லாமலிருக்கவும் முடியாமல் திண்டாடுகின்றது இலங்கை அரசு.

More:
- யாழ்ப்பாணத்தில் கலாச்சார சீரழிவு: வடக்கின் வசந்தம் தந்த பரிசு
- கூட்டமைப்பின் 'தீர்வுப் பொதி': அரசைத் திருப்திப்படுத்தவா?
- லிபியா நனைகிறது என்று இலங்கை அழுகிறது

இணைப்புக்கள்

**தமிழ்ச் செய்திகள்**
ஈழநேசன்
மீனகம்
யாழ இணையம்
பி.பி.சி தமிழோசை
லங்காசிறி
செய்திகள்
தமிழ்வின்
மனிதன்
2 தமிழ்
அதிர்வு
சரிதம்
புதினம்நியூஸ்
புதினப்பலகை
இன்போ தமிழ்
தமிழ்ஸ்பை
வன்னிஒன்லைன்
தமிழ்உலகம்
தமிழ்சிஎன்என்
சங்கதி
பதிவு
ஈழம் பிறஸ்
யுகே தமிழ்நியூஸ்
தமிழ்த்தாய்
தமிழ்ச்செய்தி
தாய்நிலம்
ஈழம்வெப்

**ஆங்கிலச் செய்திகள்**
TamilNet
TamilNational
DailyMirror
SundayTimes
SundayLeader
Nation
LakbimaNews
TheBottomLine
TamilWeek
LankaPage
ColomboPage
TheAcademic
TamileelamNews
TamilCanadian
UKTamilNews
Sangam
TorontoTamil
Reuters
MSNBC
Yahoo
BBC
Google
Worldnews
CNN

**இணைய சஞ்சிகைகள்**
ஈழநேசன்
அப்பால்தமிழ்
தெனாலி
தமிழில் கல்வி
தமிழ்சினிமா
பதிவுகள்
தமிழ்
அப்புசாமி
சினிசவுத்
கோல்டன் தமிழ்
நெற்தமிழ்
மங்கையர் மலர்
வெப் தமிழன்
திண்ணை
தமிழோவியம்
சுரதா
காலச்சுவடு
கூடல்
வார்ப்பு
நெய்தல்
கவிமலர்
தமிழோசை
எழில்நிலா
ஈழம் வோல்பேப்பர்ஸ்
தமிழம்
தமிழ்மணம்
தமிழ்வாணன்
முத்தமிழ்
தமிழமுதம்
நிலாசாரல்
த தமிழ்
உயிர்மை

**தமிழ் பத்திரிகைகள்**
வலம்புரி
வீரகேசரி
தினக்குரல்
உதயன்
விகடன்

**தொலைக்காட்சிகள்**
வளரி வலைக்காட்சி
ஜிரிவி
மக்கள் தொலைகாட்சி
விஜய் தொலைக்காட்சி
தமிழன் தொலைகாட்சி

**இணைய வானொலிகள்**
புலிகளின் குரல்
தமிழர் குரல்
ஐபிசி தமிழ்
பிபிசி தமிழ்
சிரிஆர் வானொலி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுடர் ஒளி
குமுதம்
தினகரன்
தினத்தந்தி
விடுதலை
தினபூமி
தினமணி
மாலைச்சுடர்
தினமலர்
மாலைமலர்
கல்கி
நக்கீரன்

தமிழ் விஷன்
தீபம்
குறள் தொலைகாட்சி
ஐரோப்பிய தொலைகாட்சி
ரிவி வண்
திரைப்படம் பார்க்க

தமிழ்ஸ்ரார்
வெற்றி
சிரிபிசி
தமிழ் எப்எம்
கனேடிய தமிழோசை
சிஎம்ஆர் பண்பலை
தமிழ் எப்எம்
கீதவாணி
ஏரிபிசி
சக்தி எப்எம்
சூரியன் எப்எம்
ஒலி

எம்ரிஆர் வானொலி
தமிழ் ஒலி
உலக தமிழோசை

Copyright © 2011 Pooraayam.com, All Rights Reserved.

மீனகம் Home | TamilsNews | World | Enews | Forum | Cinema | Pathivukal | Donate

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்